31 ஜனவரி 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 4 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **வாக்கு மனிதர் ஆனார்**



## நான் எந்த அளவுக்கு தீவிரமானவன்?

இன்றைய முதல் வாசகம் இணைச்சட்ட நூலில் மோசே கடவுள் தமக்கு உரைத்ததை இஸ்ராயேல் மக்களுக்கு கூறுகிறார். அவர்கள் நடுவிலிருந்து இறைவாக்கினரை ஏற்படுத்துவார். கடவுள் தரும் வார்த்தைகளை கூறும் இறைவாக்கினரின் குரலுக்கு செவிகொடாதவரை அழித்துவிடுவேன் என்றும், அதே வேளையில் கடவுளால் கட்டளையிடப்படாத எந்த ஒரு வார்த்தையைப் பேசினாலோ அல்லது பிற தெய்வங்களின் பெயரால் பேசினாலோ அந்த இறைவக்கினன் நிச்சயமாக இறப்பான் என்றும் கடவுள் தமக்கு உரைத்ததை மோசே கூறுகிறார். இந்த வார்த்தைகளின் வழியாக, கடவுள் தாம் சொல்வதைப் பற்றி எவ்வளவு தீவிரமாக இருக்கிறார் என்றும் நினைவுப் படுத்துகிறார். மேலும் அவர் சொல்வதை இஸ்ராயேல் மக்கள் கேட்டு, கடைப்பிடிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறார். கடவுளையோ அல்லது அவரது வார்த்தைகளையோ அர்ப்பமாக பார்க்கும் எவரும் அதன் தொடர் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

Image: ©123rf.com

**மனனம் செய்ய் இந்த வார வசனம்:**

நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்

(யோவான்: 14:15)

இயேசு இவ்வுலகிற்கு முழு அதிகாரத்தோடு வந்தார்; அதுவும் தீய ஆவிகளும் அவருக்குக் கீழ்ப்படிந்தன. தீய ஆவியால் பீடிக்கப்பட்ட மனிதனின் வாயில் இருந்து வந்த வார்த்தைகள்: " நீர் யார் என எனக்குத் தெரியும், நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்" . ஆனால் இயேசு அதன்பின் அந்த தீய ஆவியைப் பேசவிடாமல் உடனே தடுத்து, " வாயை மூடு, இவரை விட்டு வெளியே போ" என்று அதட்டினார். அர்ப்பமான வார்த்தைகளையோ அல்லது தமக்கு விருப்பமானதைப் பேசவோ, செய்யவோ இயேசு இந்த உலகிற்கு வரவில்லை. அவரின் நோக்கம் மிகவும் தீவிரமான ஒன்று. அது தான், தம் விண்ணகத் தந்தையின் விருப்பத்தை முழுவதுமாக நிறைவேற்றுவது மட்டுமே. இயேசு கொண்ட அதிகாரம் தந்தையிடமிருந்து வருவது; அது எந்த உயர்நிலையையோ, செல்வத்தையோ, பதவியையோ, கல்வித் தகுதியையோ அடிப்படையாகக் கொண்டது அல்ல; மக்களைப் பொறுத்தவரை, இந்தத் தகுதிதான், இயேசுவின் காலத்து மதத் தலைவர்களிடமிருந்து இயேசுவைத் தனித்து வேறுபடுத்திக் காட்டியது.

நம்பிக்கை என்பது ஒரு தீவிரமான ஒன்று. அதை எந்த நிலையிலும் அற்பமாக எண்ணி விடக்கூடாது. இதனால் தான் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில், மணமாகாதவர்களுக்கு முன் ஒரு திட்டத்தை வைக்கிறார். பிளவுபடாத அக்கறையை அவர்களால் ஆண்டவருக்குத் தரமுடியும். இங்கு கேள்விக்குறியாவது, மணமானோர், அல்லது மணமாகாதோரின் வாழ்க்கை நிலைப் பற்றியல்ல; ஆண்டவருக்கு விருப்பமானதைச் செய்வதில் உள்ள நிலைதான். இன்னும் வேறு விதமாகச் சொல்வதென்றால், நாம் மணமானவரோ, மணமாகதவரோ, அல்லது மணமாகி மீண்டும் தனித்திருப்பவரோ, அருட்பணியாளரோ, துறவறத்தாரோ எந்த நிலையில் இருந்தாலும், எனக்கும் கடவுளுக்கும் உள்ள உறவிலும், அவரின் வார்த்தைகளைக் கடைப்பிடிப்பதிலும் நான் எவ்வளவு தீவிரமாக இருக்கிறேன் என்பதில் தான் அடங்கியுள்ளது.

கடவுளோடும் அவரின் வார்த்தையோடும் நீங்கள் அற்பமான வகையில் நடந்து கொண்டால், திருப்பாடலின் ஆசிரியர் கூறும் வார்த்தைகளைக் கண்டிப்பாக நீங்கள் கேட்க வேண்டும். "உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர்; ஆண்டவர் குரலுக்குச் செவிசாய்ப்பீர்" மனம் திரும்ப எந்தெந்த வழிகளை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றை யெல்லாம் செய்ய உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. உங்களது நம்பிக்கையை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய நேரம் இதுதான்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 05/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org